பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 39
கதிர் : 222

வெள்ளிக்கிழமை
05 ஜூலை 2024

ஆனி 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


## முச்சந்தி முரளி



"சட்டம் தன்ர கடமையை ஒழுங்காச் செய்தால் கனக்க உண்மையள் வெளியால வரும் பாருங்கோ"



## ஆபத்தான போதைப்பொருளுக்கு 500,000 இலங்கையர்கள் அடிமை!

கொழும்பு, ஜூலை 5
ஐந்து இலட்சம் இலங்கையர்கள் ஆபத்தான போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளனர் என்று ஆபத்தான போதைப் பொருள் கட்டுப்பாட்டுச்சபையின் அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளதாக பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார். 11

### சம்பந்தனின் புகழுடலுக்கு

# யாழ். மக்கள் நேற்று உணர்வுபூர்வ அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 5
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பந்தனின் புகழுடலுக்கு யாழ்ப்பாணத்தில் நேற்று அரசியல் பிரமுகர்கள், முக்கியஸ்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்தினர். 11

## சம்பந்தனை அஞ்சலிக்க வருகின்றாரா ஸ்டாலின்?

யாழ்ப்பாணம், ஜூலை 5
தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரான இரா.சம்பந்தனின் இறுதிச் சடங்கில் தமிழகத்தின் முதல்வரான ஸ்டாலின் கலந்துகொள்ள வாய்ப்புகள் உள்ளன என்று தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். 11

## இந்திய இழுவைமடிகளால் ரூ. 700 மில்லியன் இழப்பு!

கொழும்பு, ஜூலை 5
இந்திய இழுவைமடி மீன்பிடிப் படகுகளின் அத்துமீறல் காரணமாக 700 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று மீன்பிடி அமைச்சு தெரிவித்துள்ளது. 11

## குடத்தனையில் நேற்று பொலிஸ் சுற்றிவளைப்பு

### குற்றப் பின்னணியுள்ள ஆறு பேர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஜூலை 5
வடமராட்சி - குடத்தனைப் பகுதியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து நேற்று மேற்கொண்ட சிறப்புச் சுற்றிவளைப்பின்போது, பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய ஆறு பேர் கைது செய்யப்பட் 11

### தெல்லிப்பழையில் இயங்கும்

## மகளிர் இல்லத்துக்கு எதிராக பொலிஸில் நேற்று மனு!

யாழ்ப்பாணம், ஜூலை 5
தெல்லிப்பழையில் இயங்கிவரும் மகளிர் இல்லம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என தெல்லிப்பழைப் பொலிஸாரிடம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தால் நேற்று மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.
மேற்படி மகளிர் இல்லத்தில் பொருத்தப்பட்ட சி.சி.ரி.வி. கமரா, மாணவிகள் குளிப்பது மற்றும் உடைமாற்று 11

## அத்தியாவசிய பொருள்களின் விலை குறைப்பு

கொழும்பு, ஜூலை 5
அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.
இதன்படி, சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு மொத்தக் கொள்வனவின் போது கிலோ ஒன்றுக்கு 15 ரூபா குறைக்கப்பட்டு 215 ரூபாவாகவும், சிவப்புப் பருப்பு மொத்தக் கொள்வனவின்போது 14 ரூபாவால் குறைக்கப்பட்டு 282 11

## 13ஆவது திருத்தம் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்புத் தேவை!



கொழும்பு, ஜூலை 5
அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதா? அல்லது இல்லையா? என்பது தொடர்பில் நாட்டு மக்கள் மத்தியில் சர்வ ஜன வாக்கெடுப்பு அவசியம் என்று சப்ரகமுவ மாகாண ஆளுநரும், முன்னாள் அமைச்சருமான நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.
இரா.சம்பந்தனின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே நவீன் திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"அரசமைப்பின் 13 ஆவது 11

## ஜனாதிபதியின் பதவி ஐந்து வருடங்களே!

### உறுதியாக நம்புவதாக ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 5
ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியாக நம்புவதாகவும், இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக் 11



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோட்டத் தொழிலாளர்களுக்கு

# ரூ.1,700 ஊதியம் வழங்கும் வர்த்தமானி இடைநிறுத்தம்!

கொழும்பு, ஜூலை 5

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபா சம்பள அதிகரிப்பு தொடர்பில் தொழிலாளர் அமைச்சால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இடைநிறுத்தி வைக்குமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புக்கு எதிராக அக்கரபத்தனை பெருந்தோட்ட கம்பனி உட்பட 21 பெருந்தோட்டக் கம்பனிகள் சமர்ப்பித்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதி வழங்கிய நிலையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் தொழிலாளர் ஆணையாளர் உள்ளிட்ட 52 பேரை வழக்கின் பிரதிவாதிகளாக கம்பனிகள் குறிப்பிட்டுள்ளன. (ம-6)

# தேர்தலைப் பிற்போடும் சதிகள் இடமளிக்கப்படக்கூடாது!

## தேசிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 5

**ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள் என உயர்நீதிமன்றம் 2019ஆம் ஆண்டு தெளிவான தீர்ப்பை வழங்கியுள்ள போதிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக் காலத்தை ஒரு வருடத்துக்கு நீடிக்க முயற்சிகள் இடம்பெறுகின்றன. இதற்கு மக்கள் அடிபணிந்துவிடக்கூடாது.**

-இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த ஜனாதிபதியும் அவரது குழுவினரும் முயற்சித்துள்ளனர். அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின்படி ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி மற்றும் அவரது குழுவின் சதிகள் மற்றும் தந்திரோபாயங்களைத் தேசிய மக்கள் சக்தி தோற்கடிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



# தேர்தலை ஒத்திவைக்க அரசால் சூழ்ச்சிகள்

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 5

ஜனாதிபதியும் அவரது அடிமைகளும் அரசமைப்பையும் மீறி ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முயற்சித்து வருகின்றனர். இந்த நாட்டில் சர்வஜன வாக்குரிமையும் மக்களின் வாக்குரிமையும் பாதுகாக்கப்படவேண்டும்.

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இது சரியான தருணம் அல்ல என மக்களை நம்ப வைக்கும் வகையில் அரசியல் செயற்றிட்டமொன்றை முன்னெடுக்க ஜனாதிபதியும் அவருக்கு நெருக்கமான குழுக்களும் முயற்சித்துள்ளன. சட்டரீதியாகவும் நடத்தப்பட வேண்டிய ஜனாதிபதித் தேர்தலை பறிக்க மேலும் பல முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் அரசியலமைப்பை மீறும் சதிகளாகும். மக்களுக்கு ஜனாதிபதியொருவரைத் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்- என்றார். (ச-44)

# மணற்காட்டில் சவுக்கு வெட்டிய மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 5

மணற்காட்டில் சவுக்கு மரம் வெட்டிய மூவரை, யாழ்.மாவட்ட வன வள பாதுகாப்புத் திணைக்களத்தினர் கைதுசெய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மணற்காடு சவுக்குமர ஒதுக்கக் காட்டிலிலுள்ள சவுக்குமரம் விறகுப் பயன்பாட்டுக்காக வெட்டப்படுவதாக, யாழ்.மாவட்ட வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைவாக சம்பவ இடத்துக்கு விசேட அதிரடிப் படையினருடன் விரைந்த திணைக்களத்தினர் ஆறு துவிச்சக்கர வண்டிகளையும், 25000 ரூபா பெறுமதியான வெட்டப்பட்ட சவுக்குமரத்தையும் கைப்பற்றியதோடு சந்தேகத்தின் அடிப்படையில் மூன்று நபர்களையும் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரையும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ப-125)

# மரம் கடத்திய வாகனம் மோதி மாணவன் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், ஜூலை 5

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்குட்பட்ட உடையார்கட்டுப்பகுதியில் தேக்கமரக்குற்றிகளைக் கடத்திச் சென்ற ஹைஏஸ் வாகனமொன்று மோதியதில் உயர்தர மாணவன் படுகாயம் அடைந்துள்ளான். இந்த சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது.

புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியால் மாணவன் மாலை நேர வகுப்பு முடித்து சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்தபோதே வேகமாக வந்த ஹைஏஸ் வாகனம் மோதியதில் விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்துத் தொர்பான விசாரணையில் வாகனத்தில் சட்டவிரோதமான முறையில் தேக்கமரக்குற்றிகள் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது.

சாரதி கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்திய போது சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. படுகாயமடைந்த மாணவன் முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளான். (ச-19)



## பஸ் - லொறி கோரவிபத்து

# 35 பேர் படுகாயம் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 5

சிலாபம் - கொழும்பு பிரதான வீதியில் மாதம்பே, இரட்டைக்குளம் பகுதியில் இடம்பெற்ற கோரவிபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 35 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதிவேகமாக வந்த லொறி ஒன்று எதிர்த் திசையில் வந்த பேருந்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்தவர்கள் சிலாபம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# புலோலியில் பதுக்கப்பட்ட போதைப்பொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

பருத்தித்துறை, புலோலி காட்டுப் பகுதியில் மறைத்து வைத்திருந்த போதைப்பொருள்கள் ஒருதொகை நேற்றுமுன்தினம் புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவை மீட்கப்பட்டன.

இதன்போது ஒரு கிலோ கேரளக் கஞ்சா, 290 போதை மாத்திரைகள் மற்றும் தராசு ஒன்று என்பன மீட்கப்பட்டன. சந்தேகநபர் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். (ச-27)

# ஐ.ம.ச.வில் ஜே.ஆரின் பேரன்

கொழும்பு, ஜூலை 5

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்டமுதலாவது ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் பேரனான பிரதீப் ஜெயவர்த்தன எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் அரசியல் பயணத்துக்கு தனது ஆதரவை நல்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்து கொண்டுள்ளார்.

அவரை ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நியமித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஊடாக கம்பஹா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அரசியலில் பிரவேசித்த இவர், 2017 இல் நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு மாநகரசபைக்குத் தெரிவானார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலைப் பிற்போடுங்கள் உயர்நீதிமன்றில் மனு

கொழும்பு, ஜூலை 5

**ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிடுவதை தடுக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் முரண்பாடுகள் உள்ளன, இதுதொடர்பிலான அரசமைப்பு சிக்கல் தீர்க்கப்படும் வரை தேர்தலுக்கான திகதி அறிவிப்பை ஒத்திவைப்பதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வர்த்தகரும் சட்டத்துறை பட்டதாரியுமான சி.டி.லீனா இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு ஜூலை 8ஆம் திகதி முதல் ஐந்து நீதியரசர்கள் கொண்ட அமர்வு முன் விசாரணைக்கு வர உள்ளதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அதேவேளை இந்த மனுவால் தேர்தல்கள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் பாதிப்படையாதென சட்ட நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். (ச-இ)



## கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்., ஜூலை 5

கோப்பாயில் கசிப்புடன் ஒருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வு தகவலுக்கு அமைவாக சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் 3லீற்றர் கசிப்பை கைப்பற்றினர்.

சந்தேகநபருக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-125)



## மோட்டார் படையணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் பொலிஸ் மோட்டார் சைக்கிள் படையணி நேற்றுக் காலை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்தன கமகேவின் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் பொதுமக்களின் வாழ்வியலை சுமுகமான முறையில் பேணவும் குற்றங்களைக் குறைக்கவும் இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. நிகழ்வில் காங்கேசன்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-125)



### இலங்கை நிர்வாகசேவை

## கண்டாவளையிலிருந்து சிந்துஜா முதல்முறை தெரிவு

கிளிநொச்சி, ஜூலை 5

இலங்கை நிர்வாகசேவைக்கு, வரலாற்றில் முதன் முறையாக, கண்டாவளைப் பிரதேசத்திலிருந்து ஒருவர் தெரிவாகியுள்ளார்.

அண்மையில் நடந்த இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான மட்டுப்படுத்தப் பட்ட போட்டிப் பரீட்சையில், முரசுமோட்டை முருகானந்தா கல்லூரியின் பழைய மாணவியான சிந்துஜா சசிகரன் சித்திபெற்று, நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றி நிர்வாக சேவைக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டிருந்தது. (ப-113)

## எயார்லைன்ஸை விற்கவில்லை

கொழும்பு, ஜூலை 5

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விற்பனை செய்யப்படவில்லை. மறுசீரமைப்புப் பணிகள் மாத்திரமே செய்யப்பட்டு வருவதாகவும் துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமானசேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

சட்டரீதியில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் 49 வீதம் மட்டுமே வேறொரு நிறுவனத்துக்கு வழங்கமுடியும். அதற்காக இதுவரை எவரும் முன்வரவில்லை.

இலங்கை தொழில்முனைவோருக்கு வழங்குவதாக இருந்தாலும் அவர்களும் அவர்களது இயலுமையை நிரூபிக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

### செயற்கை நுண்ணறிவு

## பாடசாலைகளில் கற்றல் ஆரம்பம்

பாடசாலை மாணவர்களிடையே செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப அறிவை வளர்க்கும் நோக்குடன் பாடசாலைகளில் செயற்கை நுண்ணறிவுக் கழகங்களை உருவாக்கும் திட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை தொழில்நுட்ப அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்றது.

நான்கு வருடங்களில் மாணவர்கள் மத்தியில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் இந்தக் கழகங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அரச, தனியார் துறை பங்களிப்புடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ச-6)



## தினம் தெரியுமோ?

'இந்த மகளிர் இல்லத்தில இப்பிடியும் நடக்குமோ?' எண்டு எல்லாரும் திகைக்கிற அளவுக்கு, தெல்லிப்பழையில உள்ள அந்த மகளிர் இல்லத்தில ஒரு வேலை நடந்திருக்குது. அதை மேலோட்டமா பேப்பரில வாசிச்சிருப்பியள். அந்த இல்லத்துக்கு எண்டு எப்பவும் ஒரு மதிப்பும், மரியாதையும் எல்லாரிட்டையும் இருக்கு. இதுவரைக்கும் அந்த இல்லம் பற்றி எந்த ஒரு கெட்டசெய்தியும் வந்ததுமில்லை. ஆனால் ஒரு குடம் பாலுக்குள்ள ஒரு துளி விஷம் விழுந்தாலும், அது முழுக்க விஷமாகிடும் தானே. இதுதான் இந்த இல்லத்துக்கும் நடந்திருக்கு.

மலையகத்தில இருக்கிற கஷ்டப்பட்ட பிள்ளையளை இஞ்ச கொண்டந்து படிப்பிச்சு ஆளாக்க வெளிக்கிட்டது புண்ணியமான காரியம் தான். ஆனால் எதையும் முறையாச் செய்திருக்கவேணும். அப்பிடி பிள்ளையளை இஞ்ச கொண்டந்து தங்கவைச்சு படிப்பிக்கிறதுக்குரிய எந்த அனுமதியும் அந்த இல்லக்காரர் எடுக்கவேயில்லை. சரி, அப்பிடி அனுமதி இல்லாமல் பிள்ளையளைக் கூட்டிக் கொண்டு வந்தால்,எந்தப் பிரச்சினையும் வராத மாதிரித்தானே பராமரிச்சிருக்கவேணும். அப்பிடியுமில்லை. வந்த முதல்நாளே அந்த மலையகப் பிள்ளையளுக்கு இல்லத்தில குடுக்கிற சாப்பாடு ஒத்துவரேலை. அதுக்கேத்த வகையில பிறகும் சாப்பாட்டை அவை மாத்தேலை. மலையகத்தில இருந்து வந்த பிள்ளையள் எல்லாருக்குமே 17 வயதுக்குக்கு கீழதான் இருக்கும். அவையை சின்னப்பிள்ளையளை வைச்சிருக்கிற இடத்தில தான் தங்க வைச்சிருக்கோணும், ஆனால் பெரிய பொம்பிளைப்பிள்ளையள் இருக்கிற இடத்திலதான் கொண்டந்து விட்டிருக்கினம்.

அங்க குளிக்கிறதுக்கெண்டு தனியா ஒரு இடம் இந்த மலையகப் பிள்ளையளுக்கு குடுபடேலை. ஆனால் குளிக்கிற அறையள் ஏழெட்டு இருந்திருக்கு., அதுக்க இவையைப் போக விடேலை. அந்த அறையள் அங்க வேலை செய்யிறவைக்கு எண்டு சொல்லி, ஒவ்வொரு குளிக்கிற அறையிலையும் ஒவ்வொருத் தரின்ர பேர் ஒட்டியுமிருக்காம். அதில ஒரு அறையை இந்தப் பிள்ளையளுக்கு கொஞ்சநாளைக்கு குடுத்தால் குறைஞ்சோ போடும்? அப்பிடிக் குடுக்காமல் திறந்தவெளி மாதிரி இருக்கிற இடத்தில உள்ள தொட்டியிலதான் குளிக்கச் சொல்லியிருக்கினம். மலையகப் பிள்ளையள் தானே, அவை திறந்தவெளியில குளிப்பினம் எண்ட இளக்காரம் போல. அங்க குளிக்கப் போன பிள்ளையள் மேல கமெரா பூட்டியிருக்கிறதைக் கண்டிட்டு, வோர்டனிட்ட கேட்டிருக்கினம். 'அது றோட்டைத்தான் பாக்குது. இஞ்ச ஒண்டும் பதியாது' எண்டு சொன்னதை நம்பி, அந்தப் பிள்ளையள் கமெரா பூட்டியிருக்கிற இடத்தில தான் குளிச்சிருக்கினம். நல்லகாலமா,அவையை பாக்க ஒராள் மலையகத்தில இருந்து போயிருக்கிறா.அவான்ர போன் மூலமாத்தான் வீட்டுக்காரருக்கு பிள்ளையள் விசயத்தை சொல்லியிருக்குதுகள். விசயத்தை அறிஞ்ச அஞ்சு பிள்ளையளின்ர பெற்றோர் மலையகத்தில இருந்து வந்து, 'எங்கட பிள்ளையளை கஷ்டப்பட்டாவது எங்கட இடத்தில வளக்கிறம். இப்பிடியான இடத்தில விடமாட்டம்' எண்டு கூட்டிக் கொண்டு போயிருக்கினம். அவை மூலம் தான் இந்தவிசயம் எல்லாருக்கும் தெரியவந்து இப்ப ஆளுநர் அந்த இல்லத்தை மூடச் சொல்லுற அளவுக்கு நிலைமை போட்டுது.

கொஞ்சக்காலத்துக்கு முதல், இந்த இல்லத்தை நடத்துற பெரியவர் ' முந்தி எங்கட ஊரில பொம்பிளைப் பிள்ளையள் இருக்கிற வீடெண்டால் உயரமா வேலி அடைக்கிறதை வைச்சுக் கண்டுபிடிக்கலாம் . அப்பிடி ஒரு ஒழுக்கமான பாரம்பரியம் எங்களிட்ட இருந்தது' எண்டு பண்பாடு பற்றி எல்லாருக்கும் பாடமெடுத்தவர். அப்பிடி ஊருக்கு உயரமான வேலி பற்றி உபதேசம் செய்த பெரியவருக்கு, தான் நடத்திற மகளிர் இல்லத்தில கமரா பூட்டியிருக்கிற இடத்தில திறந்தவெளியில பொம்பிளைப் பிள்ளையளைக் குளிக்க விடக்கூடாது எண்டது தெரியாமல் இருக்குமோ?



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க சுழிபுரம் பறாளாய் விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 11 ஆம் திகதி இரதோற்சவமும், 12 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (ப-125)

# இந்தியத் தூதரகத்தால் 'ஓப்பின் ஹவுஸ்'

யாழ்ப்பாணம். ஜுலை 5

வடக்கு மாகாணத்தில் வசிக்கும் மற்றும் தொழில் காரணமாக தங்கியிருக்கும் இந்தியப் பிரஜைகளுக்கான தூதரக விடயங்களுக்கான 'ஓப்பின் ஹவுஸ்' கலந்துரையாடல் யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் மு.ப. 10 மணிமுதல் 11 மணிவரை நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களில் வசிக்கும் மற்றும் பணிபுரியும் இந்தியப் பிரஜைகள் எதிர்நோக்கும் கடவுச்சீட்டு, தூதரக விவகாரங்கள் அல்லது அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை பூர்த்திசெய்யும் வகையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளின் விசா, தூதரக சேவைகள் போன்ற சான்றொப்பம் போன்றவை தொடர்பான குறைகள், வேண்டுகைகள் போன்றவை இந்தக் கூட்டங்களின்போது பூர்த்தி செய்யப்படும்.

பங்கேற்க விரும்புபவர்கள் 0212220504 என்ற இலக்கத்துடன்தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-26-125-66)

# அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜுலை 5

சுழிபுரம், பெரியபுலோ ஞானவைரவர் கோவில் வருடாந்த அலங்காரத் திருவிழா, சிவஸ்ரீ ஞானசம்பந்தக் குருக்கள் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி, தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை ஆடிப்பிறப்பு தினத்தன்று பொங்கல் விழாவும், 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சங்கு முழுக்கும் இடம்பெற்று, திருவிழா நிறைவு பெறும். (ப-9)

# அராலியில் நாளை உதைபந்துப் போட்டி

யாழ்ப்பாணம், ஜுலை 5

மறைந்த வீரர்களின் நினைவாக அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழகத்தினர், ஒரு அணியில் 7 பேர் கொண்ட, இரு அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியை நடத்தி வருகின்றனர். இத்தொடரின் இறுதிப்போட்டி, மேற்படி கழக மைதானத்தில் கழகத் தலைவர் இ.சசிகரன் தலைமையில் நாளை சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-9)

# கதிர்காமப் பயணப் பூசை

யாழ்ப்பாணம், ஜுலை 5

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் நீண்டகாலப் பாரம்பரியம்மிக்க கதிர்காமப் பயணப் பூசை நாளை சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

கதிர்காமக் கந்தன் ஆலய வருடாந்த ஆடிவேல் திருவிழா நாளைமறுதினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25,66)

# 'நினைவு கூரல்' நூல் வெளியீடு

கொழும்பு, ஜுலை 5

தமிழறிஞர் த.துரைசிங்கம் எழுதிய 'நினைவு கூரல்' நூல் வெளியீட்டு நிகழ்வு, கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

திருமதி வானதி காண்டீபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், வடமாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமார், கல்வி அமைச்சு மேனாள் மேலதிகச் செயலாளர் உடுவை எஸ்.தில்லை நடராசா எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)

# பொங்கல் உற்சவம்

யாழ்., ஜுலை 5

நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சிறப்பு பூசை அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடை பெறவுள்ளது. (ச-17)

# 'இருட்டின் காதலி' நூல் வெளியீடு

காயத்ரியின் 'இருட்டின் காதலி' எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா யாழ்.இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக இல. 24, கல்லூரி வீதி, நாற்சார் வீட்டில் நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் கவிஞர் இ.த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் அகஞ்சுரக்கும் தொகுதி சிறப்பு மருத்துவ நிபுணர் மருத்துவக் கலாநிதி ம.அரவிந்தன், சுயாதீனக் கலைஞர் செ.ராகவேந்தன், ஆசிரியரும் எழுத்தாளருமான ஸ்ரீலேகா பேரின்பகுமார், யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் கவிஞர் ச.முகுந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தொடங்கும் புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். ஆதாயம் கிடைக்கும். அனுகூலம் உண்டாகும். உறவினர்கள் வகையில் குடும்பத்தில் மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும். வீண் விவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது. சிவ வழிபாடு நன்மை தரும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு உண்டாகும். தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும். உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** தொட்ட காரியங்கள் துலங்கும் என்றாலும் உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். மகாவிஷ்ணுவை வழிபடுவதன் மூலம் சிரமங்கள் குறையும்.

**கடகம்:** நீண்ட காலமாக இழுபறியாக இருந்த அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். செலவுகள் ஏற்படும். இளைய சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். பணவரவுக்கும் வாய்ப்புண்டு. திடீர் செலவுகளால் கையிருப்புக் குறையும். முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்சினை ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

**துலாம்:** அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படும். செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**விருச்சிகம்:** அனுகூலமான நாள். தேவையான பணவரவு உண்டாகும். எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆறுமுகப் பெருமானை வழிபாடு அதிர்ஷ்டம் தரும்.

**தனுசு:** சகோதரர்கள் வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மகாலட்சுமி வழிபாடு நன்மைகளை அதிகரிக்கும்.

**மகரம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். ஆஞ்சநேயர் வழிபாடு நன்மைகளை அதிகரிக்கச் செய்யும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. செலவு செய்யவேண்டி இருக்கும். வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. விநாயகரை வழிபடுவதன் மூலம் நற்பலன்கள் அதிகரிக்கும். சக வியாபாரிகளால் பிரச்சினை ஏற்படக்கூடும்.

# பெண்கள் உதைபந்து மகாஜன சம்பியன்

யாழ்ப்பாணம், ஜுலை 5

வலிகாமம் கல்வி வலய மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பெருவிளையாட்டுகளின் வரிசையில் மகாஜனக் கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரி சம்பியன் பட்டத்தைத் தனதாக்கியது. இரண்டாம் இடத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரியும், மூன்றாம் இடத்தை கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயமும், நான்காம் இடத்தை மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன. (ச-25-555)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கண்காணிப்புகள் கட்டாயம்

யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த இரு சிறுவர் இல்லங்கள் ஆளுநரின் உத்தரவின்பேரில் இழுத்து மூடப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்று, பெண்பிள்ளைகள் குளிக்கும் இடத்தில் தவறான வகையில் கண்காணிப்புக் கமரா பொருத்தப்பட்டதால் சமூகச் சீரழிவுகள் ஏற்பட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டு மூடப்பட்டிருக்கிறது. இன்னொன்று, உரிய அனுமதிகள், வசதிகள் இல்லாமல் இயங்கியதால் மூடப்பட்டுள்ளது. இவ்வாறு சிறுவர் இல்லங்கள் குறித்தும், அங்கு நிகழும் விரும்பத்தகாத சம்பவங்கள் குறித்தும் செய்திகள் வெளிவருவதும், அவற்றின் மீது நடவடிக்கைகள் பாய்வதும் இதுவொன்றும் முதன்முறையல்ல. கடந்த வருடமும் நாலைந்து சிறுவர் இல்லங்கள் குறித்த திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி இருந்தன. அவற்றில் சில இல்லங்கள் மூடப்பட்டும் இருக்கின்றன. இன்னும் சில சிறுவர் இல்லங்கள் தொடர்பில் வழக்குகளும் நடந்து வருகின்றன.

இவ்வாறு தொடர்ச்சியாக சிறுவர் இல்லங்கள் மீதான குற்றச்சாட்டுகள் எழுவதற்குப் பல காரணங்கள் உண்டு. சிறுவர் இல்லங்களை நடத்துவோர், இப்போதெல்லாம் அதனை ஒரு தொண்டாகப் பார்ப்பதில்லை. புலம்பெயர் நிதியைப் பெறக்கூடிய வருமானமீட்டலுக்கான பொறிமுறையாகவும், புகழீட்டுவதற்கான குறுக்கு வழியாகவும் சிலர் இந்தச் சிறுவர் இல்லங்களைக் கைக்கொள்ளத் தொடங்கி விட்டார்கள். அதனால் அந்த இல்லங்களில் தங்கியுள்ள பிள்ளைகளின் நலனை விடவும், அந்த இல்லத்தை வைத்து எப்படியெல்லாம் கழிவிரக்கத்தை ஏற்படுத்தி, காசு சம்பாதிக்கலாம், புகழை வாங்கலாம் என்பதில்தான் சிறுவர் இல்ல நிர்வாகிகள் சிலரின் கவனம் குவிந்துள்ளது. புதிய புதிய பெயர்களில் மூலைமுடுக்கெல்லாம், அனுமதி ஏதும் பெறாமல் சிறுவர் இல்லங்களை ஆரம்பிப்பதென்பதும் இவ்வாறு பணமீட்டலுக்கும், புகழ் பெறவும் தானோ என்ற சந்தேகமும் எழவே செய்கிறது. உண்மையாகவே சிறார்களின் நலன் பேணுவதற்காக, தன்னார்வமாக சிறுவர்களைப் பராமரிப்போரும் இருக்கவே செய்கின்றனர். ஆனால் அவர்கள் ஒருசிலர் செய்கின்ற கீழ்த்தரமான காரியங்களால் நல்லெண்ணத்தோடு செயற்படும் பலரின் அர்ப்பணிப்பான சேவைகளும் பெறுமதியிழக்கவேண்டிய சூழல் எழுந்துள்ளது.

இந்த நிலைக்கான இன்னொரு காரணி, உரிய திணைக்களங்களின் சீரான மேற்பார்வையின்மையே. சிறுவர் இல்லங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனவா? உரிய அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளனவா? அவை இயங்குவதற்காக முன்வைக்கப்பட்ட நிபந்தனைகள் சரிவரப் பின்பற்றப்படுகின்றனவா? சிறார்களுக்கான உணவு, தங்குமிடம் உள்ளிட்ட சகல வசதிகளும் சரிவர எல்லோருக்கும் கிடைக்கின்றனவா? துஷ்பிரயோகங்கள் ஏதும் நிகழ்வதற்கான சாத்தியங்கள் உண்டா? என்பன குறித்தெல்லாம், சிறுவர் இல்லங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் கொண்டவர்கள் குறிப்பாக சிறுவர் நன்நடத்தைத் திணைக்கள அதிகாரிகள் கரிசனை காட்டவேண்டும். ஆனால், அவர்கள் தங்கள் கடமைகளை உரியகாலத்தில் செய்யத்தவறுவதாலும், பாரபட்சம் பார்ப்பதாலும் சிறுவர் இல்லங்களை நடத்தும் ஒருசிலர் தம்மிஷ்டப்படி ஆடுகின்றனர். சிறிது, பெரிது என்ற பேதம் பாராமல் சகலரையும் சமமாகக் கருதி, எல்லாச் சிறுவர் இல்லங்களையும் தமது தீவிர கண்காணிப்பு வளையத்துக்குள் உரிய அதிகாரிகள் கொண்டுவந்தாலேயே, அந்த இல்லங்களில்நடைபெறும் விரும்பத்தகாத சம்பவங்களை வெகுவாகக் குறைக்கக்கூடிய சாத்தியங்கள் உண்டு. ஆனால், ஒரு சிறுவர் இல்லம் பற்றிய முறைப்பாடுகள் ஊடகங்களில் வெளிவந்தவுடன், பரபரப்பாக இயங்கும் சிறுவர் நன்நடத்தைத் திணைக்களத்தினர் பின்னர் படிப்படியாக உறங்கு நிலைக்குச் சென்றுவிடுகின்றனர். பின்னர் மறுபடி ஒரு குற்றச்சாட்டு பூதாகரமாகும்போதே அவர்கள் விழித்தெழுகின்றனர். இந்த நிலை மாறவேண்டும். சிறுவர் இல்லங்கள் தொடர்பில் தொடர்ச்சியான, இறுக்கமான கண்காணிப்புகள் அவசியம். இல்லாவிட்டால், சிறுவர் இல்லங்கள் என்றாலே பேயுலாவும் வீடுபோல நோக்கும் மனோநிலை மக்களிடத்தே ஏற்பட்டுவிடலாம்.





# மாலைதீவு கல்வி வளர்ச்சிக்கு இலங்கை ஆசிரியர்கள்!



**மாலைதீவு, ஜூலை 5**

**மாலைதீவின் கல்வி வளர்ச்சிக்கு இலங்கையிலிருந்து தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை அமர்த்துவதற்கு மாலைதீவு தீர்மானித்துள்ளது.**

மாலைதீவு, ஜூலை 5
இலங்கையிலிருந்து தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களை, மாலைதீவுக்கு அனுப்புமாறு மாலைதீவு ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.
மாலைதீவுக்கான புதிய தூதுவர் பெலோப்பொலகே ரங்க சுஜீவ குணவர்த்தன தனது நியமனக்கடிதத்தை மாலைதீவு ஜனாதிபதியிடம் பெற்றுக்கொண்டார்.
இதன்போதே மாலைதீவு ஜனாதிபதி, மாலைதீவின் கல்வி வளர்ச்சிக்கும், சுகாதார அபிவிருத்திக்கும் இலங்கை உதவவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார். (ப-6)

## மடுவில் இந்திய வீடுகள் 100 மில்லியன் ஒதுக்கீடு

கொழும்பு, ஜூலை 5
இந்திய உதவித்திட்டத்தின் கீழ் மடுப் பிரதேசத்தில் குறைந்த செலவில் வீடமைக்கும் வீட்டுத்திட்டப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான கடிதங்கள் இரண்டாம் திகதி இந்தியத் தூதுவர் சந்தோஷ்ஜாவுக்கும் நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சின் செயலர் சத்தியானந்தாவுக்குமிடையே பரிமாறப்பட்டுள்ளன. இதற்கென நூறு மில்லியன் ரூபாவை இந்திய அரசு ஒதுக்கியுள்ளது. (ச-6)

## முல்லையில் யுக்திய 7 பேர் கைது

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய சுற்றிவளைப்பில் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 7 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு 9ஆம்,10ஆம் வட்டாரப் பகுதிகளில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து நேற்றுமுன்தினம் சோதனையில் ஈடுபட்டனர். இதன்போது 43 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## மத்தளவின் நிர்வாகம் இந்தியா - ரஷ்யா வசம்

பெரும் நட்டத்தை சந்தித்துவரும் மத்தள விமானநிலையத்தின் நிர்வாகம் அடுத்த சில வாரங்களில் ரஷ்ய -இந்திய கூட்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது. சீனாவிடம் பெற்ற 307 மில்லியன் அமெரிக்க டொலர் கடனில் மத்தள விமான நிலையமானது கட்டப்பட்டது.
மத்தள சர்வதேச விமானநிலைய நிர்வாகத்தை இந்தியா-ரஷ்ய நிறுவனங்களிடம் 30 வருட காலத்துக்கு ஒப்படைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ச-இ)

## உயிர்மாய்ப்பு வருடத்துக்கு 3,000

கொழும்பு, ஜூலை 5
ஒவ்வொரு வருடமும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தற்கொலை செய்துகொள்கின்றனர் என்று தெரியவந்துள்ளது.
ஜூலை முதலாம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படும் தேசிய காயம் தடுப்பு வாரத்தின்போது இந்தப் புள்ளிவிவரம் சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆபத்தான போக்கை எதிர்த்துப் போராடுவதற்கு, மேம்பட்ட மனநல ஆதரவு சேவைகள், சமூக விழிப்புணர்வுத் திட்டங்கள் சவாலாக இருப்பதாக சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். (ச-இ)

**நாளை**

06.07.2024

**சனிக்கிழமை - ஆனி - 22**

நல்லநேரம் : 02.58 - 04.28

ராகுகாலம் : 08.58 - 10.28

**நாளொரு நல்வார்த்தை**

**அவசரமாகத் தவறு செய்வதை விட தாமதமாகச் சரிவரச் செய்வது மேல்.**

*- தாமஸ் ஜெபர்சன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அச்சுவேலி, கதிரிப்பாய் முரசொலி சனசமூக நிலையத்தின் 76 ஆவது ஆண்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உதயன் குழுமத் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் கலந்து சிறப்பித்தார். (ச-125)



## நல்லூரில் குருபூசை

யாழ்ப்பாணம் , ஜுன் 5

ஈழத்துச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் குரு பூசை நிகழ்வு, நல்லூர் சைவப்பிரகாசப் பேரவையின் செயலாளர் வே.சிவகுருநாதன் தலைமையில் நல்லூர் செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் கூட்டுப் பிரார்த்தனை வழிபாடுகளைத் தொடர்ந்து சிறப்புக் குருபூசை வழிபாடுகளும் நடைபெற்றன. இணுவிலைச் சேர்ந்த சோ.பரமசாமி எழுதிய 'குருவழி நடந்த குணவான்' எனும் ஆன்மீக நூலின் மீள் பதிப்பும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசி உரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகச் சமஸ்கிருதத்துறை விரிவுரையாளர் சு. நவநீதகிருஷ்ணசர்மா நூலின் வெளியீட்டுரையையும் ஆற்றினர். (ச-22-66)

## விளையாட்டு விழா



வடவரணி முன்பள்ளியின் விளையாட்டு விழா முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவர் திருமதி சு.தமிழினி தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக உதயன் குழுமத் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவனும் சிறப்பு விருந்தினர்களாக வரணி வடக்கு அ. த.க. பாடசாலை அதிபர் ந.வசந்தரூபன், குடும்பநல உத்தியோகத்தர் திருமதி சு. சிந்துஜா ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வரணி குடும்ப முன்பள்ளித் தலைவர் லோ. கேதிகா,கொடிகாமம் பனை தென்னைவள அ.கூ. சங்கத் தலைவர் செல்வேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-25-159)



## பஞ்சாபிகேசன் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்.சாவகச்சேரி மண்ணைச் சேர்ந்த நாதஸ்வர மேதை கலாநிதி கே.எம்.பஞ்சாபிகேசனின் நூற்றாண்டு விழா மருத்துவர் சு.சி.அருளானந்தம் தலைமையில் யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். பஞ்சாபிகேசனின் உருவச் சிலை திறப்பு, மங்கள இசை, நாத இசைச் சங்கமம், எம்.பஞ்சாபிகேசன் நூற்றாண்டுச் சிறப்பு மலர் வெளியீடு,மூத்த நாதஸ்வர - தவில் கலைஞர்களின் கௌரவிப்பு மற்றும் கலைநிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. (ச-25-66-9)

## சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 5

சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தினால், மனித உரிமை டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி அம்பிகா சிறீதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், வடக்கு மாகாணசபையின் பிரதம செயலர் எல். இளங்கோவன், ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி சொ.தியாகேந்திரன், யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் துஷானி சயந்தன், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை உத்தியோகத்தர் க.ரஜீவன், விரிவுரையாளர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-20)



சக்தி கலாசார மேம்பாட்டு மன்றத்தின் 22 ஆவது ஆண்டு நிறைவு விழா, நாயன்மார் கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. மன்றத்தின் தலைவர் அ.சனுஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.கிருஷ்ணகுமார், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சிமுழங்காவில்மகாவித்தியாலயத்தின் பிரதி அதிபர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி, முல்லைத்தீவு சமூகச்சிற்பி சு.ஜெயராசசிங்கம் எனப் பலர் கலந்துகொண்டனர். (ப-159)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் விற்பனை நிலையத்துக்கு சீல்: சுகாதாரக் குறைபாடுகள் காரணம்

யாழ்ப்பாணம், ஜுலை 5

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் இயங்கி வந்த பால் விற்பனை நிலைய மொன்று, சுகாதாரக் குறைபாடுகள் காரணமாக சீல்வைத்து மூடப்பட்டுள்ளது.

மேற்படி விற்பனை நிலையத்தில், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர் பரிசோதனை நடத்தியபோது பழுதடைந்த தயிரை விற்பனைக்காக வைத்திருந்தமை, உரிய சுகாதார நடைமுறைகளைக்கடைப் பிடிக்காது வர்த்தகத்தில் ஈடுபட்டமை அவதானிக்கப்பட்டு, விற்பனை நிலையத்தின் உரிமையாளருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கு விசாரணையின்போது விற்பனையாளர் தன் மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து, அவரை கடுமையாக எச்சரித்த நீதிமன்றம் 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன், சுகாதாரக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும் வரைக்கும் வர்த்தக நிலையத்தை மூடுமாறும் உத்தரவிட்டுள்ளது.

(ம-20-17)

## நூல் வெளியீடு

**'சுதந்திரத்திற்குப் பின்னரான அரசியலமைப்புக்களும் சிறுபான்மையினரின் நிலைமைகளும்'** என்ற சட்டத்தரணி கனக நமநாதன் வீரகேசரி ஞாயிறு இதழில் 2019ம் ஆண்டு எழுதி வெளிவந்த தொடர் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூலாக வெளிவருகின்றது.

இந்நூல் வெளியீடு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் **(Y.M.H.A)** 07.07.2024 ஞாயிறு காலை 10.00 மணிக்கு திரு.த. கணநாதலிங்கம் தலைமையில் ஆரம்பமாகிறது. பிரதம அதிதியாக யாழ் பல்கலைக்கழக பதிவாளர் திரு. விஸ்வநாதன் காண்டீபன். வெளியீட்டு உரையை இலங்கை சிறுவர் நிதிய நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் கலாநிதி இராஜன் தவசீலன் ஆகியோருடன் நூலாய்வு உரையை வலம்புரி பிரதம ஆசிரியர் திரு.ந.விஜயசுந்தரம் ஆற்றுகிறார். நூலாசிரியர் சட்டத்தரணி கனக நமநாதனின் ஏற்புரையுடன் வெளியீட்டு விழா முடிவுபெறும்.

**தகவல்**
**திரு.க. நமநாதன்**
**077 667 5080**

(CS/55575) J-1

## மரண அறிவித்தல்



**தோற்றம்** 07 . 10 . 1939

**மறைவு** 02 . 07 . 2024

### சபாநாயகம் கனகம்மா (பூபதி)

தாவடி தெற்கு கொக்குவிலை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சபாநாயகம் கனகம்மா (பூபதி) கடந்த 02.07.2024 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சபாநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், நாகராணி (வசந்தி), ரேணுகாதேவி (தேவி), சத்தியேஸ்வரி (மாலா), பரமேஸ்வரி (சிவா), வட்சலாதேவி (பிறேமா), சதீஸ்குமார் (அப்பன்), சுரேஸ்குமார் (ஈசன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சர்வானந்தன், சிவதாசன், ஜங்கரன், முகுந்தன், ரமணன், றாதிகா, காயத்ரி ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிராம், அபிரா, கிசோக், கிருஷன், ரித்திகா, சங்கீர்த், சாரங்கன், சர்வின், ஆருஷ், அதர்ஷ், ஆரிஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா, தங்கரத்தினம், நடராசா, சின்னத்தம்பி, கண்மணி மற்றும் பாலகிருஷ்ணன் (கோண்டாவில்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தியாகலிங்கம் (லண்டன்), காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், அன்னலிங்கம், சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2024) வெள்ளிக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பத்தானை வீதி,**
**தாவடி கிழக்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**076 772 4299 (மகள்)**

(cs.55582) (N-1

**காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**அல்லின்வீதி காரைநகர்**
**பதிவு இலக்கமும் திகதியும் : J / 22 - 15.09.1999**

## பதவி வெற்றிடம்

**01. பதவி** - பொதுமுகாமையாளர்
சம்பளக் குறியீடு - 101/09
சம்பள அளவுத்திட்டம் - 20200-250x10-260x10-25300
(கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருபத்திற்கமைய இதர படிகளும் வழங்கப்படும்.)

**வெற்றிடம் - 01**

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ. கூட்டுறவு ஊழியர் 10 வது சம்பளத்திட்டத்தில் முகாமைநிலை / மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது இரண்டு (02) ஆண்டுகால அனுபவம். /

கூட்டுறவு ஊழியர் 11 வது சம்பளத்திட்டத்தில் முகாமைநிலை / மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது நான்கு (04) ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 03 வருட அனுபவம்./

க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

**02. ஏனைய விபரம்**

1. வயதெல்லை 18 தொடக்கம் 45 வரை (கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிவோருக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.)
2. சங்கம் கோருகின்ற ரொக்கப்பிணை, ஆதனப் பிணை என்பவற்றினை தெரிவு செய்யும் பணியாளர் செலுத்துதல் வேண்டும்
3. சங்கங்களில் பணிபுரிவோர் தமது விண்ணப்பங்களை தமது சங்கத்தின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரிகள் சங்கத்தின் தலைமை அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தை பெற்று பூரணப்படுத்தி இப் படிவத்துடன் பிறப்புச் சான்றிதழ் தகைமைச் சான்றிதழ்களின் போட்டோ பிரதியினையும் இணைத்து விண்ணப்பிக்கும் பதவியின் பெயரையும் குறிப்பிட்டு தலைவர் காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், அல்லின் வீதி, காரைநகர். என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்.
5. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
6. முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள், தகுதி இல்லாத விண்ணப்பங்கள் முடிவு திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் இரத்துச் செய்யப்படும்
7. **விண்ணப்ப முடிவுத்திகதி** 18.07.2024..
8. கணினி அறிவு மேலதிக தகைமையாக கருதப்படும்.

**தலைவர்,**
**காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.**
**அல்லின் வீதி, காரைநகர்.**
**தொலைபேசி இல:- 021 373 7754**

(ci42771) (N-1)

## மரண அறிவித்தல்



**தோற்றம்** 22 . 06 . 1963

**மறைவு** 04 . 07 . 2024

### ஆறுமுகம் கந்தசாமி

வடமராட்சி மானியவளை, செம்பியன்பற்றை பிறப்பிடமாகவும், மட்டுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கந்தசாமி நேற்று (04.07.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஆறுமுகம் - பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், தாமோதரம்பிள்ளை - வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், விக்கினேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், ஜங்கரன் (ஆசிரியர் - விநாயகபுரம் அ.த.க பாடசாலை - துணுக்காய்), அஞ்சலன் (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), ஐஸ்வர்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசம்மா, கமலம்மா காலஞ்சென்றவர்களான இராமச்சந்திரன், திருத்தணிகாசலம், சுப்ரமணியம் மற்றும் தெய்வமலர், ஈஸ்வரி, பத்மநாதன், நகுலேஸ்வரி, லோகாம்பிகை ஆகியோரது பாசமிகு சகோதரனும், தாட்ஷாயனி, துவாரகன் (இலங்கை மின்சார சபை), கீர்த்திகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அக்ஷயா, ஆகீஷா, ஆத்விகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மனைப் வீதி,**
**மட்டுவில் தெற்கு,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 136 6955**
**077 792 7608**

(CS/42772) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனித உரிமை மீறல்கள் விசாரணை வேண்டும்

## மல்கம் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 5

இன, மத பேதங்களைத் தூண்டிவிட்டு, ஸ்திரமற்ற நிலையை உருவாக்கியவர்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தப்படவேண்டும்- இவ்வாறு மன்னார் மருதமடு தேவாலயத்தின் நூற்றாண்டு திருவிழாவில் கலந்துகொண்ட போது கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இனங்களுக்கு இடையில் பேதங்களை ஏற்படுத்தி முரண்பாடுகளை உண்டாக்கியவாறு முன்னெடுத்துச் செல்லப்பட்ட கொள்கை, ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னர் மேலும் வலுவடைந்தது. இன, மத பேதங்களை உண்டாக்கியதுடன், நாட்டைத் துண்டாக்கி அதிகாரத்தைக் கைப்பற்ற முனைந்த அரசியல்வாதிகளே இவ்வாறான கொள்கைகளைக் கொண்டு சென்றதுடன், தொடர்ந்தும் கொண்டு செல்கின்றனர்.

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் பேசப்படும் தற்போதைய நாட்களில் தமிழ் மக்கள் தங்களது அடையாளத்தை வலுப்படுத்துவதற்கான கட்டமைப்பை உருவாக்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரிக்கப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# உரிமைகள் காக்கப்படும்

பிரான்ஸ் வேட்பாளர் தெரிவிப்பு

பிரான்ஸ், ஜூலை 5

பிரான்ஸில் தேர்தல் நடைபெற்று வரும் நிலையில் தான் பதவிக்கு வந்தால் கடும் போக்கு முஸ்லிம் பள்ளிவாசல்கள் அனைத்தும் இழுத்து மூடப்படும் என தீவிர வலதுசாரிக்கட்சி வேட்பாளர் லீபென் தெரிவித்துள்ளார்.

வெறுப்புணர்வைத்தூண்டும் கருத்துகளை வெளியிடுவோர் நாடுகடத்தப்படுவார்கள், பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும், மத பன்முகத்தன்மை என்ற பெயரில் பெண்களின் உரிமைகள் பறிக்கப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. நான் பதவிக்கு வந்தால் சில வாரங்களில் இந்த விடயங்களை சட்டபூர்வமாக நடைமுறைப்படுத்துவேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-25.6)

### திருமலைத் துறைமுகத்தில்

# உலகப்போரில் சிதைந்த பிரிட்டன் கப்பல் மீட்பு

திருகோணமலை, ஜூலை 5

இரண்டாம் உலகப்போரின்போது, ஜப்பானிய குண்டு வீச்சுத் தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் கப்பல் ஒன்று, இலங்கைக் கடற்படையினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப்போரின் போது, திருகோணமலைத் துறைமுகத்தில் தரித்து நின்ற எச்.எம்.எஸ்.ஹெர்மஸ் என்ற பிரிட்டன் கடற்படைக்கப்பல், ஜப்பானிய குண்டு வீச்சு விமானங்களின் தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்டிருந்தது. இந்தக்கப்பலை மட்டக்களப்பு கடற்பரப்பில் 55 மீற்றர் ஆழத்தில், இலங்கைக் கடற்படையினர் கண்டுபிடித்துள்ளனர். (ப-6)



வரலாற்றுச் சிறப்புமிக்க அரியாலை பிறப்பங்குளம் மகா மாரியம்மன் தேவஸ்தானத்தின் 1008 சங்காபிஷேகம் மற்றும் மணவாளக் கோல பூந்தண்டிகை உற்சவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (ப-27)


# மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 07 . 1947



மறைவு 04 . 07 . 2024

## ஐயாத்துரை சந்திரதேவன்

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சந்திரதேவன் நேற்று (04.07.2024) வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - தங்கப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் செல்வஞானத்தின் அன்புக் கணவரும் பிரசாத்தின் பாசமிகு தந்தையும் நிவேதிகாவின் அன்பு மாமனாருமாவார். இராமசாமி, காலஞ்சென்றவர்களான நவரத்தினம், சரஸ்வதி, இராசராணி, தர்மதுரை, சரோஜினி தேவி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனகிரியைக்காக விலங்கன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
புன்னாலைக்கட்டுவன் தெற்கு மகன் பிரசாத் - 077 402 3386



உ
சிவமயம்



ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு
SRI NAGAPOOSHANI AMMAN KOVIL - NAINATHIVU

## கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

கோவிலின் கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது. தகுதி உடையவர்கள் 15.07.2024 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை "செயலாளர்" அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

### தகமைகள்

- இந்து சமயத்தவராக இருத்தல் வேண்டும்.
- 25 வயதிற்கு மேற்பட்டவராகவும் 65 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.
- பல்கலைக்கழகத்தில் கணக்கியல் தொடர்பாகப் பெற்ற பட்டம்.
- கணக்காளர் சேவை மற்றும் அதனோடு இணைந்த சேவைத் தகமைகள்.

விண்ணப்பத்துடன் தகமைகள் சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்பட வேண்டும். விண்ணப்பத்திற்கு ஏற்ப நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவோர் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

செயலாளர்
அறங்காவலர் சபை,
ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுகூடலுக்கு குந்தகம்; இலங்கையில் நடைமுறை

## ஐ.நா. விசேட அறிக்கையாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 5

2023 ஜனவரி முதல் 2024 ஜனவரி வரையான ஒரு வருடகாலத்தில் இலங்கையிலும் ஒன்றுகூடுவதற்கான உரிமையைப் பாதிக்கக்கூடிய வகையிலும், அதனை மட்டுப்படுத்தக்கூடிய விதத்திலும் சட்டங்களும், வழிகாட்டல்களும் உருவாக்கப்பட்டுள்ளன என ஐ.நா. விசேட அறிக்கையாளர் க்ளெமென்ற் நியலெற்றொஸி வோல் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 56 ஆவது கூட்டத்தொடருக்கு சமர்ப்பித்த அறிக்கையில்,

சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களைப் பாதுகாப்பதானது தற்கால சவால்களைக் கையாள்வதில் சிவில் சமூகத்தின் வகிபாகத்தை மேம்படுத்துவதற்கு இன்றியமையாததாகும்.

அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமைக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய நடவடிக்கையை உலகநாடுகளின் அரசாங்கங்கள் முன்னெடுக்கக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ச-இ)

# துஷ்பிரயோக தடுப்புப்பிரிவு புதுக்குடியிருப்பில் திறப்பு



முல்லைத்தீவு, ஜூலை 5

புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில், சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்புப் பிரிவு ஒன்று, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.பி.ஆர்.ஹெரத் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் திலக் சி.ஏ.தனபால கலந்துகொண்டு, புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்புப் பிரிவினைத் திறந்து வைத்துள்ளார். (ப-13)

# நாய்களுக்கு கருத்தடை

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினரால் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வளர்ப்புப் பெண் நாய்களுக்குக் கருத்தடை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் தமது வளர்ப்பு பெண் நாய்களுக்கு கருத்தடை சத்திர சிகிச்சைமேற்கொள்ள வேண்டுமாயின் நகரசபை அலுவலக சுகாதார அலகில் பி.ப. 2 மணியிலிருந்து3 மணி வரை பதிவுகளை மேற்கொள்ளலாம்.

இந்தச் சத்திரசிகிச்சை எதிர்வரும் 17 மற்றும் 24 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது என்று பொது சுகாதாரப் பரிசோதகர் கூ.குணசாந்தன் அறிவித்துள்ளார். (ப-9)

# பிற்போடல்

பாடசாலை மாணவர்களுக்காக எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, இணுவைத் தமிழ்ச் சங்கத்தால், நடத்தப்படவிருந்த வசந்த விழாப் போட்டிகள் யாவும், பிரதேச மட்ட அறநெறிப் போட்டி மற்றும் தமிழ்த்தினப்போட்டிகள் காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளதாகவும், புதிய திகதி பின்னர் அறியத் தரப்படும் எனவும் இணுவைத் தமிழ்ச் சங்க நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ப-66)


## முதலாம் ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
பொன்னையா பூபாலசிங்கம்
(புகழானந்தம்)
திதி : 05.07.2024

ஆண்டு ஒன்று கடந்தது
ஆறாத கணங்களுடன்!!
தீண்டும் உங்கள் நினைவுகளால்
தீருமா எம் வேதனைகள்!!
நீண்டு நெடுவாழ்வு வாழ்வீர்கள் என்று
நித்தம் நினைத்தோமே!!
நேராத கணமென்று உணர்ந்தும்
நினைக்காதிருக்க முடியவில்லை!!
ஆறாத வலியென்று தெரிந்தும்
ஆறுதல் பெற இயலவில்லை!!
வேராக நீங்கள் இருந்தும் விழுதாக
நாங்கள் எல்லாம் மனம் உருகி
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்தனை
செய்கின்றோம்!!!

தோற்றம் 29.06.1944 | மறைவு 18.06.2023

36/1, 10ம் ஒழுங்கை, வைரவப் புளியங்குளம், வவுனியா.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்
077 547 8411

(CS/28421) J-1

## மரண அறிவித்தல்



**அருட்சகோதரி கனிஸ் மிக்கேல்பிள்ளை (தி.கு)**

சுருவில், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி கனிஸ் மிக்கேல்பிள்ளை தி.கு கடந்த (01.07.2024) திங்கட்கிழமை இறைபதம் இணைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நாளை (06.07.2024) சனிக்கிழமை மு.ப 8.00 மணிக்கு பாஷையூர் திருக்குடும்ப கன்னியர் சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்
மாகாணத் தலைவி.

121, பிரதான வீதி
யாழ்ப்பாணம்.

(CS/55586) J-1

## 31ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 26.08.1946 | மறைவு 05.06.2024

**அமரர் இராசு பஞ்சரட்ணம்**

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை
ஓய்வு பெற்ற முகாரி (Foreman)
திதி : சதுர்த்தசி

அன்பின் இருப்பிடமே பாசத்தின்
உறைவிடமே எங்கள் அண்ணா
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
உங்கள் சிரிப்புமுகம் என்றும் மாறாது
எங்கள் இதயத்தில்
மண்ணை விட்டு பஞ்சுபோல் பறந்து
விண்ணோக்கிச் சென்று 31 நாட்கள் சென்றாலும்
ஆறாது அண்ணா உங்கள் பிரிவின் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

சேச்லேன்
கொக்குவில் கிழக்கு.

அன்புத் தங்கை மாலா குடும்பத்தினர்
உடன் பிறவாத சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்



பிறப்பு 19.09.1942 | இறப்பு 03.07.2024

**இராசா பரமானந்தம்**
(இளைப்பாறிய P.W.D ஓவசியர்)

இல 18A சிவகுருநாதர் வீதி, நீராவியடி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசா பரமானந்தம் நேற்று முன்தினம் (03.07.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா - வள்ளியம்மா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற நடராசா மற்றும் சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும், ஈஸ்வரியின் அன்புக் கணவரும், நளினி (France), நகுலன் (Germany), நளாயினி (ஆசிரியை, யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருவருட்செல்வன் (France), ஸ்ரீபிரவீனா (Germany), இரகுலேசன் (ஆசிரியர் யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும், நிரூபன், நிவேதன், நிருத்திகா, சௌமியா, ஆஷா, நர்த்தனா, நயனா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான அருளானந்தம், சண்முகானந்தன் மற்றும் சிவானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகராணி, சுகிர்தமலர், மங்களராணி, காலஞ்சென்றவர்களான வசந்தினி, ஸ்ரீஸ்கந்தராசா, குணநாதன் மற்றும் சறோஜினி, பேரின்பநாதன், ராங்கநாதன் ஆகியோரின் மைத்துனரும், யமுனா, வேலாயுதபிள்ளை, சைலஜா, நிகிலா ஆகியோரின் சகோதர முறையிலானவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (07.07.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 608 7687
077 812 4144

18A, சிவகுருநாதர் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(CS/55534) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையின மக்களின் தேவையை அறிந்துணர்ந்தவர்

## சம்பந்தன் மறைவுக்கு ஹக்கீம் இரங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 5
தமிழ்ச் சமூகத்துக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் இடையிலான உறவின் இணைப்புப் பாலமாக விளங்கிய மூத்த அரசியல் ஆளுமை இரா.சம்பந்தன். இலங்கையில் புரையோடிப் போயுள்ள தேசிய இனப் பிரச்சினையில் குறிப்பாக தமிழ் மக்களுக்கும் பொதுவாக சிறுபான்மைச் சமூகங்களுக்கும் உச்சபட்ச அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காக தனது வாழ்நாள் பூராகவும் அயராது பாடுபட்டவர்.

-இவ்வாறு இரா. சம்பந்தனின் மறைவுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இரங்கல் வெளியிட்டுள்ளார்.

மாறிமாறி ஆட்சிக்கு வந்த தென்னிலங்கை பேரினவாத அரசியல் தலைமைகள் வழங்கி வந்த "நிறைவேறாத" வாக்குறுதிகளை மையப்படுத்தியதாக அவரது வாதங்கள் நாடாளுமன்றத்தில் ஓங்கி ஒலித்தன.

திசை மாறிய போதிலும் கூட, அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான சமாதானப் பேச்சுகளை தமிழர் தரப்புகளுக்கும் சிறுபான்மையினருக்கும் ஏற்புடையதான விதத்தில் கருத்தொருமைப்பாட்டை காணும் நோக்குடன் முன்னெடுப்பதில் சம்பந்தன் நாட்டம் கொண்டிருந்தார்.

தமிழ்ச் சமூகத்துக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் இடையிலான உறவின் ஆழ அகலங்களையும், ஏற்ற இறக்கங்களையும் அவர் நன்றாக அறிந்து வைத்திருந்தார். நாட்டில் இக்கட்டான சூழ்நிலையில், மிகவும் முக்கியமான காலகட்டத்தில் அவரது இழப்பு நேர்ந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)



இலங்கைத் தமிழரசு கட்சியின் பெருந்தலைவர் சம்பந்தனின் புகழுடலுக்கு, தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக் கிளையினரால் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.
(ம-125-26)

# தமிழர்களின் அரசியல் தீர்வு ஜனாதிபதிகளிடம் ஏமாற்றமே

## அரியநேத்திரன் ஆதங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 5
இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதியுடனும் கதைத்து ஏமாறுவதற்கு முன்பாகவே நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் மறைந்துவிட்டார். தமிழின விடுதலைக்காக போராடிய தேசிய பெருந்தலைவரை நாம் இழந்துவிட்டோம்.

- இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு-கிழக்கு இணைந்த சமஷ்டித் தீர்வு விடயத்தில் இலங்கையின் எட்டு ஜனாதிபதிகளும் ஏமாற்றத்தையே தந்துள்ளனர்.

கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுக்கொடுக்கவேண்டும் என எட்டு ஜனாதிபதிகளிடமும் பேசப்பட்டும் அதற்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்காமல் சம்பந்தன் ஐயாவை ஏமாற்றி இருக்கின்றார்கள்.

தமிழ் மக்களின் உரிமைக்காகவே தனது தொடர் போராட்டத்தை அகிம்சை வழியில் முன்னெடுத்தார். அவரின் ஆசைப்படியே இறுதிவரை எமது உரிமைகளுக்காக நாம் போராடவேண்டும் - என்றார். (ச)

# சம்பந்தனின் அபிலாஷை நிறைவேற்றப்படவேண்டும்



## ஆனந்தசங்கரி இரங்கல்

கிளிநொச்சி, ஜூலை 5
சம்பந்தன் ஆற்றிய தொண்டு பாராட்டத்தக்கது. அதை யாரும் மறுக்க முடியாது. தமிழின விடுதலைக்காக எத்தனையோ தியாகங்கள் செய்து அவரது முயற்சி பலனற்றுப் போனமை கவலையளிக்கிறது. சம்பந்தனின் அபிலாஷைகள் நிறைவேறுவதற்கு ஒன்றிணைந்து பயணிப்போம்.

-இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

அவரது இரங்கல் செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது:-

எனக்கும் சம்பந்தனுக்கும் கிட்டத்தட்ட 70 ஆண்டுகள் உறவு இருந்தது. தந்தை செல்வாவுக்குப் பெரிதும் மதிப்புக் கொடுத்து வந்தவர்.

இந்த இனத்தினுடைய நன்மை கருதி சம்பந்தன் பல விடயங்களைச் செய்தார். சம்பந்தனின் அபிலாஷைகள் நிறைவேறுவதற்கு வேறு சக்திகள் இடம்கொடுக்கவில்லை.

எனவே, இனியும் நாங்கள் ஏமாறமுடியாது. அனைவரும் இணைந்து தமிழர் இனப் பிரச்சினைக்கு முடிவு காணுவோம் - என்றுள்ளது. (ச-113)



# கட்சிகளின் கூட்டிணைவே நாம் செலுத்தும் நன்றிக்கடன்

## கோ.கருணாகரம் இரங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 5
தமிழ்மக்களின் உரிமைகளுக்காக ஜனநாயக வழிமுறைகளில் இடைவிடாது அரசியல் ரீதியாகச் செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் மறைவு தமிழ்மக்களின் அரசியல் பயணத்தில் ஒரு பேரிழப்பாகும்.

-இவ்வாறு தமிழ் ஈழவிடுதலை இயக்க செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான கோ.கருணாகரம் இரங்கல் வெளியிட்டுள்ளார்.

2001ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தலைமைதாங்கி வழிநடத்தி வந்த இரா.சம்பந்தன் கூட்டமைப்பின் பிளவிலும், தனது இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சிக்கல்களிலும் அண்மைக் காலங்களில் மனம்நொந்திருந்தார்.

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் ஒற்றுமையும் ஒருமிப்பும் ஒருங்கிணைந்த தமிழ்த் தேசியப் பயணமுமே நாம் அவருக்குச் செய்யும் இறுதிக் கடனாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)





இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனின் அஞ்சலி நிகழ்வு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மந்திகை, மடத்தடியில் அமைந்துள்ள வடமராட்சிக் கிளைக் காரியாலயத்தில் [illegible] தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ப-66)

# தமிழ் - முஸ்லிம் மக்கள் இணைப்பு அடையாளம்

## முஸ்லிம் பேரவை இரங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 5
இலங்கையின் சிரேஷ்ட அரசியல் ஆளுமையுமாகிய இலங்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஐயாவின் மறைவு இலங்கை அரசியல் பரப்பிலும், தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் ஈடுசெய்யப்பட முடியாத வெற்றிடத்தையும், இழப்பையும் ஏற்படுத்தியுள்ளன. இவ்வாறு யாழ்ப்பாணம் - கிளிநொச்சி முஸ்லிம் பேரவை இரங்கல் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் வெளியிட்ட அறிக்கையில்,

நிரந்தர அரசியல் தீர்வுக்கான அனைத்து மட்டத்திலான நீண்டகால அரசியல் முன்னெடுப்புகளிலும் இலங்கை முஸ்லிம் மக்களையும் இணைத்து தமிழ்பேசும் மக்களாக ஒன்றிணைத்து முன்னெடுத்திருந்தமையே சம்பந்தன் ஐயாவின் தலைமைத்துவம் மற்றும் ஆளுமையை வெளிக்காட்டுகின்றது. கட்சி அரசியலுக்கு அப்பால் அனைத்து மக்களையும் அரவணைத்துச் செல்லும் அவரது பண்பே அரசியலில் அவரை மாபெரும் இடத்துக்கு கொண்டு சென்றது எனலாம். தனது மக்களின் தீர்வுக்காக இறுதிவரை போராடிய பெருந்தலைவரையே இலங்கை தமிழ்பேசும் சமூகம் இன்று இழந்து நிற்கின்றது. - என்றுள்ளது. (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக்கு இடையூறு வழங்க ஆசிரியர்களுக்கு இடமில்லை

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கல்வி நடவடிக்கைகளுக்கு இடையூறு வழங்குவதற்கு, எந்தவொரு ஆசிரியருக்கும் இடமில்லை என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.
அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்கும் நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
ஆசிரிய சேவையில் கால் பதிப்பவர்கள் வருங்கால சந்ததிக்காக தம்மை அர்ப்பணிப்பவர்களாக இருக்கவேண்டும். ஒழுக்கமில்லாத கல்வியால் நாட்டைக் கட்டியெழுப்பமுடியாது. ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக நான் கல்வியமைச்சருடனும் அதிகாரிகளுடனும் நிகழ்நிலையில் கலந்துரையாடி வருகிறேன்.
இடமாற்றம் காரணமாக எந்தவொரு ஆசிரியரும் பாதிக்கப்படக்கூடாது. அத்துடன் காலை 7.30 மணியிலிருந்து பிற்பகல் 1.30 மணிவரை கல்விச் செயற்பாடுகளுக்கு இடையூறு வழங்க எந்தவொரு ஆசிரியருக்கும் இடமில்லை என்றும் ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்துள்ளார். (ம-6)





# மாவட்டச் செயலர்கள் கடமை பொறுப்பேற்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5
யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் முழுநேர மாவட்டச் செயலர்களாக நியமிக்கப்பட்டுள்ள ம.பிரதீபன் மற்றும் எஸ்.முரளிதரன் ஆகிய இருவரும் நேற்று வியாழக்கிழமை தமது கடமைகளைச் சம்பிரதாயபூர்வமாகப் பொறுப்பேற்றனர். இருவருக்கும் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவால் நேற்றுமுன்தினம் நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-27-113-66)

# திருகோணமலையில் இருநாள்கள் சம்பந்தனை அஞ்சலிக்க ஏற்பாடு!

யாழ்ப்பாணம், ஜூலை 5
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனின் புகழுடல், திருகோணமலையில் பொதுமக்களின் அஞ்சலிக்காக இரண்டு தினங்கள் வைக்கப்படவுள்ளன.
இன்று, நாளை என இரண்டு தினங்களே சம்பந்தனின் புகழுடல் திருகோணமலையில் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. (ம-66)

### ஜனாதிபதியின்...

குழுவுக்கு ஆதரவளிப்பதாகவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக்காலம் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்த சமிந்த தயான் லேனவ என்பவர் தம்மிடமோ, சட்டத்தரணிகளிடமோ ஆலோசனை பெறவில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளதாகவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-ம-66)

### யாழ்...

சம்பந்தனின் புகழுடல் விசேட விமானம் மூலம் நேற்றுக்காலை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்டது. யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் மு.ப. 10 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இதன்போது சம்பந்தனின் புகழுடலுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொடி போர்த்தப்பட்டு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.
வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ்ப்பாணம் இந்தியத்துணைத் தூதரகத்தின் கொன்சியூல் ஜெனரல் சாய் முரளி, தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், தமிழரசுக் கட்சியின் கிளைத்தலைவர்கள், உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் அஞ்சலிப்பு நிகழ்வில் கலந்துகொண்டனர்.
கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்தும் பெருமளவான மக்கள் வருகைதந்து சம்பந்தனுக்கு தமது அஞ்சலிப்பைச் சமர்ப்பித்தனர்.
இதேவேளை - திருகோணமலையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சம்பந்தனின் புகழுடல் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. சம்பந்தரின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்வோருக்கென யாழ்ப்பாணத்தில் இருந்து விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-20-26-125-66)

### ஆபத்தான...

'யுக்திய' நடவடிக்கையின் இரண்டாம் கட்டம் குறித்து ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு அறிவிக்கும் கூட்டத்தில் கலந்துகொண்டபோதே பொலிஸ் மா அதிபர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
போதைப்பொருள் வியாபாரிகள் என அடையாளம் காணப்பட்ட 5 ஆயிரத்து 979 பேரில் 5 ஆயிரத்து 449 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுவரை பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களின் பெறுமதி 190 மில்லியன் ரூபா எனவும், சட்டவிரோதமாக கைப்பற்றப்பட்ட வாகனங்கள் மற்றும் சொத்துகளின் பெறுமதி 11 ஆயிரத்து 457 மில்லியன் ரூபா எனவும் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-6)

### சம்பந்தனை...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இரா.சம்பந்தனின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக பிரமுகர்கள் பலர் வரவுள்ளனர். இந்தியாவின் ஆளுங்கட்சியான பா.ஜ.க.வின் தமிழகத் தலைவர் அண்ணாமலை, சம்பந்தனின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள வரவுள்ளார். இதை [illegible] உறுதிப்படுத்தியுள்ளார்.
இதேவேளை - தமிழக முதல்வர் ஸ்டாலினும் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளவுள்ளாரென தகவல்கள் வெளிவந்துள்ளன. ஆனால், அவருடைய பங்கேற்புத் தொடர்பில் உறுதிப்படுத்தப்படவில்லை.
இதேவேளை - சம்பந்தனின் இறுதிச் சடங்கில் பொதுமக்கள் கலந்துகொள்வதற்காக சிறப்புப் போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன- என்றார். (அ-ம-125-26)

### இந்திய...

இந்திய மீனவர்கள் வடக்குக் கடற்பரப்பில் மீண்டும் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டுவரும் நிலையில், அத்துமீறிய மீன்பிடிக்காக கடந்த இரண்டு வாரங்களில் 50க்கும் மேற்பட்ட மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களின் படகு மோதி ஸ்ரீலங்கா கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததையடுத்து இந்த விடயங்கள் இரு நாடுகளுக்கும் இடையில் பூதாகரமான விடயங்களாக மாற்றம் பெற்றுள்ள நிலையிலேயே, அத்துமீறிய மீன்பிடி தொடர்பான பாதிப்புகளை இந்திய அரசாங்கத்துக்கு இலங்கை தெளிவுபடுத்தியுள்ளது.
இது தொடர்பான மேலும் சில விடயங்கள் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் மீன்பிடி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-ம-6)

### குடத்தனையில்...

டுள்ளனர். மருதங்கேணிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் இந்தச் சிறப்புச் சுற்றிவளைப்பும் கைது நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வாள்வெட்டு, கசிப்புக் காய்ச்சுதல் உள்ளிட்ட சமூக விரோதச் செயல்களுடன் தொடர்புடையவர்களே கைது செய்யப்பட்டவர்களாவர்.
கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-66)

### 13 ஆவது...

திருத்தம் என்பது எமது அரசமைப்பில் உள்ள ஒரு விடயமாகும். உயர்நீதிமன்றமும் அதனை ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே, 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த தேவையான ஏற்பாடுகள் இடம்பெறவேண்டும். 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுலாக்க சிலர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். எனவே, 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது குறித்து நாட்டு மக்களிடம் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி தீர்மானம் எடுக்கவேண்டும். சம்பந்தன் ஜனநாயக வழியில் செயற்பட்டவர். வன்முறையை எதிர்த்தவர் சிறந்த சட்டத்தரணி" -என்றார். (அ-ம-44)

### மகளிர்...

வதைப் பதிவுசெய்கின்றது என்ற விடயம் ஆளுநர் அலுவலகம் வரையில் தெரிவிக்கப்பட்டு சர்ச்சையாகியுள்ள நிலையிலேயே, அது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று கோரி இந்த மனு கையளிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

### அத்தியாவசிய...

ரூபாவாகவும், வெள்ளைச் சீனி மொத்தக் கொள்வனவின்போது கிலோ ஒன்று 6 ரூபாவால் குறைக்கப்பட்டு 269 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்கந்தபுரத்தில்

# ஏற்று நீர்ப்பாசன பயிர்ச்செய்கை!

கிளிநொச்சி, ஜூலை 5

கிளிநொச்சி, ஸ்கந்தபுரத்தில் ஏற்று நீர்ப்பாசனப் பயிர்ச்செய்கையில் விவசாயிகள் ஆர்வமாக ஈடுபட்டு வருகின்றனர். நீண்டகாலமாக செயலிழந்திருந்த இந்தப் பயிர்ச்செய்கை தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நிலையில் விவசாயிகள் ஏற்று நீர்ப்பாசன பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அக்கராயன் குளத்திலிருந்து ஏற்று நீர்ப்பாசனம் மூலம் பயிர்ச்செய்கைக்கு நீர் வழங்கப்படுவதால் தற்போது 50 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

ஏற்கனவே அக்கராயன் குளத்தில் இருந்து கண்ணகைபுரம் மேட்டுப்பயிர்ச்செய்கைக்கான நீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் திருவையாறிலும் ஏற்று நீர்ப்பாசன பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ப-13)

# தொழில் முயற்சியாளர்களே அபிவிருத்திக்கு பக்கபலம்

## யாழ்.பதில் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

தொழிற்றுறையில் முன்னேற்றங்களை அடைவதற்குத் தொழில் முயற்சியாளர்களே உந்துசக்தி. சர்வதேச தரத்தில் எமது நாட்டு உற்பத்திகள் இப்போது பிரபல்யமடைந்து வருகின்றன.

-இவ்வாறு யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

மாவட்ட மட்டத்தில் தொழில் முயற்சியாளர்களுடனான கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார். தற்கால தலைமுறையை புதிய உலகுக்குப் பொருத்தமான தொழில் முயற்சியாளர்களாக உருவாக்கவேண்டும். தொழில்முயற்சியாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெறும் வகையில் யாழ். மாவட்ட ரீதியாகத் தொழிற் றுறை மன்றங்களை உருவாக்கி தொழில் முயற்சியாளர்களின் தேவைகளை அடையாளம் கண்டு வழிப்படுத்தித் தெளிவூட்டுவோம் என்றும் தெரிவித்தார். (ப-66)



ஒரே மாதத்தில்

# சாவ. மருத்துவமனையில் 4 மருத்துவர்கள் மாற்றம்

**யாழ்ப்பாணம், ஜூலை 5**

**சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு ஒரு மாதத்தில் நான்கு மருத்துவ அத்தியட்சகர்கள் மாற்றப்பட்டுள்ளனர். இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.**

சாவகச்சேரி மருத்துவமனை பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய மருத்துவ அத்தியட்சகர் ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனைக்கு இடமாற்றல் செய்யப்பட்டார். அவரின் இடத்துக்கு புதிய மருத்துவ அத்தியட்சகர் நியமிக்கப்பட்டார். அவர் கடமையைப் பொறுப்பேற்ற மறுநாள் ஒரு வருட உயர்கல்விக்காக சென்றதையடுத்து ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் கடமையாற்றிய பெண் மருத்துவர் சாவகச்சேரி மருத்துவமனைக்கு பதில் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

அதேவேளை மற்றொரு மருத்துவர் கொழும்பு சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டு பத்து தினங்களுக்கு முன்னர் பதில் பொறுப்பதிகாரியாக பொறுப்பேற்றுள்ள நிலையில் கடந்த புதன்கிழமை மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளரால் பிறிதொரு மருத்துவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக சாவகச்சேரி மருத்துவ நிர்வாகத்தினரிடம் விசாரித்தபோது உயர்கல்விக்குச் சென்ற மருத்துவர் கடமையைப் பொறுப்பேற்கும் வரை புதிய மருத்துவப் பொறுப்பதிகாரி பதில் கடமையாற்றுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25.9)

# பொருளாதார மீட்சிக்கு ஜப்பான் பிரதான பங்கு

*வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 5

இலங்கையின் பொருளாதார மீட்சியில் ஜப்பான் பரஸ்பர நன்மையளிக்கக்கூடிய மிக முக்கியமான வகிபாகத்தைக் கொண்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பிணைப்பானது பரஸ்பர மரியாதை மற்றும் புரிந்துணர்வு ஆகியவற்றையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது.

ஜனநாயகம், மனித உரிமைகள், திறந்த பொருளாதாரச் செயற்பாடுகள் மற்றும் மக்களுக்கு இடையிலான தொடர்புகள் என்பனவே எமது இருநாடுகளுக்கிடையில் விசேட பிணைப்பை உருவாக்கியுள்ளது.

இலங்கை கடந்த ஆண்டு தீவிர பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்த தருணத்தில் ஜப்பான் வழங்கிய நிதி உள்ளிட்ட சகல உதவிகளை நாம் வரவேற்கின்றோம்.

எமது பொருளாதார மீட்சியில் ஜப்பான் பரஸ்பர நன்மையளிக்கக்கூடிய வகிபாகத்தைக் கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# வருடாந்த நாடகவிழா

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் வருடாந்த நாடக விழா, கடந்த திங்கள் மற்றும் செவ்வாய் ஆகிய இருதினங்கள் நடைபெற்றது.

நாடக விழாவில் வாகீசர் இல்லம் தகிப்பு முதலாம் இடத்தையும், சுந்தரர் இல்லம் அகத்தின் ஈரம் 2 ஆம் இடத்தையும், சம்பந்தர் இல்லம் செப்படிவித்தை 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளன.

நிகழ்வில் சிறந்த நடிகராக சுந்தரர் இல்லத்திலிருந்து கபிநாத், சிறந்த நடிகையாக வாகீசர் இல்லத்திலிருந்து ஏ.சாருயன், சிறந்த துணை நடிகராக சுந்தரர் இல்லத்திலிருந்து சிபிராஜ்,சிறந்த துணைநடிகையாக சம்பந்தர் இல்லத்திலிருந்து ஆகாஷ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை விசேட திறன் கொண்ட நடிகர்களாக மாணிக்கர் இல்லத்திலிருந்து எஸ்.டர்சினும், சுந்தரர் இல்லத்திலிருந்து கபினும், சிறந்த காட்சியமைப்பாளராக சுந்தரர் இல்லத்திலிருந்து சிபிராஜும், சிறந்த மேடைமுகாமையாளராக வாகீசர் இல்லத்திலிருந்துஎஸ்.டினுசனும் தெரிவு செய்யப்பட்டனர். (ப)

**கட்டடம் வாடகைக்குத் தேவை**

யாழ் புறநகர், நல்லூர் மற்றும் திருநெல்வேலி பகுதிகளில் **குத்தகைக்கு அல்லது வாடகைக்கு,** வேலைத்தல கட்டட அமைப்புடனான இடம் தேவைப்படுகிறது.

தொடர்பு:- 077 919 1529

(CS/55585) J-1

**வேலைவாய்ப்பு**

யாழ். நகரில் அமைந்துள்ள ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் (புத்தகசாலை) எனும் நிறுவனத்திற்கான வேலைவாய்ப்பு ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

தொடர்புகளுக்கு :

077 494 9683, 077 077 6469

(CS/8711) J-1

**கணக்காளர் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல தொழிற்சாலை ஒன்றிற்கு அனுபவமிக்க கணக்காளர் Accountant தேவை. சம்பளம் அனுபவத்திற்கேற்ப 75000/- to 100000/- வரை வழங்கப்படும்.

தொடர்பு:- 077 788 5039

(CS/870) J-1

**கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி**

அனைத்து பழைய மாணவர்களுக்கும்,

**வருடாந்த பொதுக்கூட்ட அழைப்பு**

எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் **21.07.2024** ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை **3.00** மணிக்கு **பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறுவதற்கான** ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே அனைத்து பழைய மாணவர்களையும் இந்தக் கூட்டத்தில் தவறாது கலந்துகொண்டு தங்களது பெறுமதி வாய்ந்த கருத்துக்களை வழங்கி உதவும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தலைவர் / செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்,**
**கிளி / கிளிநொச்சி மத்திய கல்லூரி.**

(cr.42770) (N-1)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.07. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org